செ.வெ.எண்.931 நாள். 31.10.2008

# செய்தி வெளியீடு

தமிழ் நாட்டில் பொது விநியோக திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமை வழங்க மாதம் தோறும் 3783 மெ.டன் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், அக்டோபர் 08 வரையில் அவ்வப்போது கூடுதல் ஒதுக்கீடு மைய அரசிடமிருந்து பெற்று பொது விநியோக திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு கூடுதல் ஒதுக்கீடும் சேர்த்து அக்டோபர் 2008 மாதத்தில் 11283 மெ.டன் கோதுமை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்போது மைய அரசு அக்டோபர் 2008 முதல் டிசம்பர் 2008 வரையிலும், மாதம் 10000 மெ.டன் கோதுமை கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது. அதனால், கூடுதல் 10000 மெ.டன் கோதுமையில் 2500 மெ.டன் கோதுமை, செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு அரவை செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதமுள்ள 7500 மெ.டன் கூடுதல் கோதுமையும் வழக்கமான ஒதுக்கீடு 3783 மெ.டன் கோதுமையும் சேர்த்து ஆக மொத்தம் மாதம் ஒன்றுக்கு 11283 மெ.டன் கோதுமை தொடர்ந்து நவம்பர் 08 மற்றும் டிசம்பர் 08 ஆகிய மாதங்களிலும் விநியோகிக்க ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதனை, குடும்ப அட்டைதாரர்கள், அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. கோதுமை பெறுவதில் குறைகள் இருப்பின் சென்னை துணை ஆணையாளார் (நகரம்) வடக்கு அல்லது தெற்கு / மாவட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையாளரை / வட்ட வழங்கல் அலுவலரை தொடர்பு கொள்ளலாம்ணையாளருக்காக

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9